**சுருக்கம்**

புராதன நகரம் – தஞ்சாவூர் மாவட்டம்– அருள்மிகு புன்னை நல்லூர் மாரியம்மன் திருக்கோவில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் ஊராட்சியை புராதன நகரமாக அறிவிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா–2) துறை**

அரசாணை (நிலை) எண். 158

நாள்: 18.12.2014
ஜய, மார்கழி 3,
திருவள்ளுவர் ஆண்டு – 2045
படிக்கப்பட்டது:

1. நகர் ஊரமைப்பு ஆணையரின் கடித Roc.No. 26188/2013/UP1, நாள் 03.01.2014.
2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித Roc.No. 9465/13/த2 நாள் 16.12.2013.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க. எண். 9405/2013, ஊராட்சி 3.3, நாள் 22.04.2014.

-----

**ஆணை:**

15.07.2014 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு சட்டமனறப் பேரவை விதி 110–ன் கீழ், தஞ்சாவூர் மாவட்டம், அருள்மிகு புன்னை நல்லூர் மாரியம்மன் திருக்கோவில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் ஊராட்சியை புராதன நகரமாக அறிவித்து அவ்வூராட்சியின் உட்கட்டமைப்புக்கு ரூ.1 கோடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட நகர் ஊரமைப்பு இயக்குநரின் கடிதத்தில் கருத்துரு பெறப்பட்டது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்து இக்கருத்துருவினை பரிந்துரை செய்தார்:-

(i) இக்கோவில் ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்ததுடன், சோழ மன்னர்கள் தஞ்சையை ஆட்சி செய்த காலத்திலேயே ‘மாரியம்மன்’ வழிபாட்டுத் தெய்வமாக விளங்கியுள்ளது. தற்பொழுது ‘புன்னைநல்லூர்’ என்று அழைக்கப் பெற்று வரும் புன்னை வனத்தில் புற்றுருவில் அமைந்த தெய்வம், மழை வளம் தரும் மாரியம்மனாக போற்றப்படுவதுடன் வெப்பக் கொடுமையால் ஏற்படும் நோய்களுக்கு மருந்தான முத்து மாரியாகவும், மனக்குறை தீர்க்கும் மகாமாரியாகவும் விளங்குகிறார்.

(ii) புன்னை மரக்காட்டில் புற்று மண்ணில் சக்தி உருவாய் அருள்பாலித்த அம்மனை வழிபட்ட கீர்த்திச் சோழனுக்கு மக்கட்பேறு இல்லாத குறை நீங்கியதாக ‘மகாத்மியம்’ என்ற நூல் தெரிவிக்கிறது. கி.பி.1776 முதல் 1798 வரை தஞ்சையை ஆட்சி செய்த அமர்சிங் என்ற மன்னன் பாபநாசம் அருகில் உள்ள பண்டார வாடை என்ற கிராமத்தில் ஒரு பாகத்தை மாரியம்மனுக்கு மானியமாக அளித்து அப்பகுதிக்கு ‘மாரியம்பாள்புரம்’ என்ற பெயரையும் சூட்டினார். ஆலய முகப்பின் வடக்குப் பாதையில் ‘அம்மா

மண்டபம்' உள்ளது. இங்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருவிழா நடைபெற்று வருகிறது.

(iii) சோழமன்னர்கள் காலத்தில் தோன்றி மராட்டிய மன்னர்கள் காலத்தில் புதுப்பொலிவு பெற்ற திருத்தலமாக உருவெடுத்து ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலுக்கு இராசகோபுரம் அமைக்கப்பட்டு 27.6.2004ல் திருக்குட முழுக்கு நடைபெற்றுள்ளது.

(iv) தமிழக அரசு அறிவித்துள்ளவாறு ஆலயத்தில் தினந்தோறும் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, புரவலர்கள் பலரால் நிதியளிக்கப்பட்டு நீண்ட தொலைதூர உள்ளூர் ஏழை எளிய பக்தர்களும் பயனடையும் வகையில் அமைந்துள்ளது. தமிழக திருக்கோவில்களிலேயே பெரும் பொருட்செலவில் இங்கு அமைந்துள்ள இந்த நிழற்கூரை தான் மிக நீளமானதாக விளங்குகிறது.

3. மேற்படி, மாரியம்மன் கோவில் ஊராட்சியினை புராதன நகரமாக அறிவித்திட சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையங்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, நிதி ஆகிய துறைகளும் இசைவளித்துள்ளன.

4. நகர் ஊரமைப்பு இயக்குநரின் செயற்குறிப்பின் மீது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, சட்டமன்றப் பேரவை 110–ன் கீழ் அறிவிப்புக்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம், அருள்மிகு புன்னை நல்லூர் மாரியம்மன் திருக்கோவில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் ஊராட்சியை புராதன நகரமாக அறிவித்து ஆணை வெளியிடப்படுகிறது. அதன் பின்னரே அவற்றின் உட்கட்டமைப்புக்கு நகர் ஊரமைப்பு ஆணையரால் நகர் ஊரமைப்பு திட்ட நிதியிலிருந்து ரூ.1 கோடி வழங்கப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,சென்னை– 15.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.

<u>நகல்</u>
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை–9
நிதித்( ஊ.வ. (ம) ஊ) / (வீ.வ (ம) ந.வ.) துறை சென்னை–9
சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையங்கள் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வ.செ(ம)ஒ / அநமு.2) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**